1972 மார்ச் 28]

[Thiru P. U. Shanmugam]

The Commercial Tax authorities accordingly assessed the F.C.I. to sales tax for the year 1968–69. The F.C.I. disputed this before the Appellate Assistant Commissioner who dismissed the appeal. The F.C.I. thereupon, filed an appeal before the Sales Tax Appellate Tribunal which is presided over by a judicial officer of the rank of a District Judge. The Tribunal by its order, dated 13th March 1972 dismissed the appeal and confirmed the assessment of the F.C.I. made by the Department. All the contentions of the F.C.I. referred to in the newspaper report had already been placed by them before the Appellate Assistant Commissioner and the Tribunal, and these statutory forums had gone in detail into these and dismissed them as not tenable.

As already stated by me in this House on 24th March 1972, the F.C.I. has collected sales tax on its transactions in fertilisers but has withheld remitting this to the State Government on instructions from the Government of India. We understand that the F.C.I. has received such instructions even as late as on 15th March 1972 from the Ministry of Food and Agriculture.

Under the Tamil Nadu General Sales Tax Act, fertiliser is liable to a single point tax on the first sale and it is the sale by the F.C.I. that is accordingly to be taxed. The Sales Tax Appellate Tribunal in its order, dated 13th March 1972 has also fixed the liability on the F.C.I. only, as the first seller in the State. Even though this Government are in a position to recover the tax from the F.C.I. in pursuance of the Tribunal's findings, we would request the Government of India to settle the matter amicably and direct the F.C.I. to pay to the State Government the sales tax due to the State Government.

The State Government on its part will have no objection to set off against these dues whatever collections of sales tax the Commissioner of Food Production has made.

(ஆ) பேசின் பிரிட்ஜ் அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தின் பணி முடிவடைவதில் தாமதமும் அதனால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து பாதிப்பும் குறித்து.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை எண் 41-வது விதியின்கீழ்,

[திரு. கா. வேழவேந்தன்]

" பேசின் பிரிட்ஜ் அருகில் அமையும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தின் பணி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கியும், இன்னமும் முடிவடையாமல் தள்ளிப் போகின்ற காரணத்தால் நெல்லூர் நெடுஞ்சாலை மூலம் சென்னை நகருக்கு வரும் ஏராளமான வண்டிகளும், மக்களும் பல கல் தொலைவு சுற்றிக்கொண்டு வரவேண்டியுள்ள நிலை " பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் பகுதியில் மூன்று பாலங்கள் அகலப்படுத்தும் பணி அரசினர் ஆணை எண் 830, பொதுப்பணித் துறை நாள் 1—4—66-ல் (Under Part II Scheme) வழங்கப்பட்டுள்ளது. இதனுள் கீழ்க்காணும் பணிகள் அடங்கும் :—

(1) பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

(2) ஓட்டேரி கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

(3) ரெயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துதல்.

(4) மேல் குறிப்பிடப்பட்டுள்ள பாலங்களுக்கிடையில் ஆன அணுகுசாலைகளை அமைத்துத் தார் மேற்பரப்பு அமைத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகளுள் முதல் இரண்டு பணிகள் முடிவாகி விட்டன. மூன்றுவதாகக் குறிப்பிட்டுள்ள பணி இருப்புப் பாதைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தப் பணி மார்ச் மாத இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மேற்குறிப்பிட்ட நான்காவதான பணியில் மீண்ட பகுதியில் 150 அடிக்கான சதுாரமும் வியாசர்பாடி பகுதியில் 50 அடிக்கான தூரமும் தவிர மீதமுள்ள பகுதியில் பணி முடிந்துவிட்டது. அந்த பகுதி ரயில்வேயினால் அவர்களின் பணிக்காக உபயோகப்படுத்தப் பட்டு வருகிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) ரெயில்வேயின் பணி முடிந்த பிறகு விடப்பட்ட பகுதியில் தார் மேற்பரப்பு ஏப்ரல் 1972-ம் வருடத்திற்குள் போடப்பட்டு விடும் என்று கூறுகிறார். மேலும், தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அவர்கள் தேசீய நெடுஞ்சாலை வழியாக நெல்லூருக்கு நேரிடை போக்குவரத்து ஏப்ரல் 1972 இறுதிக்குள் ஆரம்பமாகும் என்றும் கூறுகிறார்.

தாமதம் பற்றிச் சொன்னார்கள். இந்தப் பணிகளுக்காக டெண்டர்கள் கோரப்பட்டு, 7-2-1967-ல் ஒப்பந்தம் எழுதப் பட்டது. நில ஒப்படைப்பில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக அவர்கள் தங்கள் டெண்டரை திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டனர். பின்னர் மறுபடியும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, 1970 சனவரி மாதம்தான் ஒப்பந்தம் ஏற்பட்டது எல்லா வேலைகளும் முடிவடைந்து 1972 ஏப்ரல் இறுதிக்குள் நேரிடைப் போக்குவரத்து ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

4. அறிக்கை அளித்தல்

"நாத்திகம்" நாளிதழ் மீதான உரிமை மீறல் பிரச்சினையில் உரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கை

THIRU P. SEENIVASAN : I rise to present the interim report of the Committee of Privilege on the matter of privilege raised against the Tamil daily 'Nathigam' in regard to certain comments published in its issue, dated 10th March 1972.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (தணிப்பு) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (தணிப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.